# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## அசல் வழக்கு எண். 67–2022

**நாள்:** 10.10.2025

**பெயர் : ராஜாராமன்**

**DW: 1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்துக்கள் வேதாரண்யம் தாலுக்கா, நாலுவேலுபதி கிராமம், வெள்ளப்பள்ளம் கிராமம், தலைஞாயிறு 1 சந்தி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த தாவா சொத்துக்கள் அனைத்தும் குடும்பத்திற்குரியது என்றால் சரிதான். எனது பாட்டனார் காலமான பிறகு எனது தகப்பனார் பாலகிருஷ்ணன் அவரது சகோதரர் ரங்கசாமி, நாராயணசாமி, பொன்னுசாமி, ராஜரத்தினம் ஆகியோர்கள் 10.08.1971 பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி அதனை வேதாரண்யம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 2552/1971 ஆக பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த பாக பிரிவினை பத்திரம் எனது தகப்பனாரின் B Schedule சொத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். G Schedule சொத்து குண்டுமணியாள் அவர் ஆயுளுக்கு பிறகு இந்த சொத்தை எனது தகப்பானார் பாலகிருஷ்ணனும் அவரது சோகதரர் ரெங்கசாமியும் அடைந்துகொள்ள வேண்டியது என பாக பிரிவினை பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். குண்டுமணியம்மாள் இறந்த பிறகு எனது தகப்பனார் பாலகிருஷ்ணன் அவரது சகோதரர் ரெங்கசாமியும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது தகப்பானருக்கு மேற்கண்ட பாக பிரிவினையில் உள்ள B schedule சொத்து குண்டுமணியம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட G Schedule சொத்து எனது தகப்பனாருக்கு கிடைத்த பாக சொத்து ஆகியவை சேர்த்தது தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் பாலகிருஷ்ணன் 07.07.1997ல் காலமாகிவிட்டார் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது குடும்பத்தில் பாகபிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பானாருக்கு வாதிகள், நான், 2ம் பிரதிவாதி மற்றும் வீரம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது எல்லா பெண்களுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றும் நான் சொல்வது தவறு என்றும் இரண்டு பெண்களுக்கு

மட்டுமே திருமணம் ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரிகளின் திருமணம் அழைப்பிதழ் கைவசம் உள்ளது. நீதிமன்தறத்தில் அதனை தாக்கல் செய்யவில்லை. திருமணம் நடந்தது தெரிந்துவிடும் என்பதால் தான் திருமண பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்த பிறகு எனக்கும் என் சகோதரிகளுக்கும் பாகபிரிவினை ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிகளோ, 2ம் பிரதிவாதியோ தாவா சொத்துகளில் எங்களுக்கு பாக பாத்திய விடுதலை பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் எழுதி கொடுத்தார்கள். 2009 ஆம் ஆண்டு 1 அல்லது 2 வது மாதத்தில் எழுதிகொடுத்தார்கள். இதேபோல் பாக பாத்திய விடுதலை பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரையில் எனது சகோதரிகள் பாக பாத்திய விடுதலை பத்திரத்தில் சொத்துக்களை விற்றுக்கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.என்னுடைய எதிர்வழக்குரையில் 02.03.1978 ல் எனது தகப்பனார் எனது தாயார் வீரம்மாளுக்கு உயில் எழுதி வைத்ததாக எதிர்வழக்குரையில் கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் பதிவு செய்யப்பட்டதா பதிவு செய்யப்படாததா என்றால் பதிவு செய்யபடவில்லை. என்னால் சொல்லப்படும் உயில் பத்திரம் எதிர்வழக்குரையிலோ அல்லது எனது தரப்பு விசாரணையிலோ தாக்கல் செய்யபடவில்லை என்று சொன்னால் சரிதான். அது என்னுடைய தாயாரிடம் இருந்தது அது என்னிடம் இல்லை. அந்த உயில் பத்திரம் என் தாயாரிடம் இருந்தது என்றும் அது என் வசம் இருந்து வரவில்லை என்றும் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என் தகப்பானர் 02.03.1988ல் எந்தவித உயில் பத்திரம் தாவா சொத்துக்களை பொறுத்து என் தாயார் பெயரில் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் தவறு. உயில் பத்திரம் இல்லாத காரணத்தால் தான் அதனை என்னால் நீதிமன்றத்தில் காண்பிக்கபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. குடும்ப பூர்வீக சொத்தை பொறுத்து என் தகப்பானருக்கு உயில் பத்திரம் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் 24.02.2009ந் தேதி ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் எழுதி வாங்கியுள்ளேன். செட்டில்மெண்ட்

பத்திரத்தில் வாதிகளும், 2ம் பிரதிவாதிகளோ சாட்சி கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் உள்ள பாக வீதத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக என் தகப்பானார் உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்று எனது தாயார் மோசடியாக செட்டில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இதுபோன்ற செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுப்பதற்கு என் தாயாருக்கு உரிமை இல்லை என்றும் அது சட்டப்படி செல்லக்கூடியதும் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாத ஆவணம் என்றும், அது நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதன் அடிப்படையில் எனக்கு எவ்வித சொத்து உரிமையும் ஏற்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 1997லிருந்து 2009 வரை தாவா சொத்துக்களை பொறுத்து என் தாயார் பெயரில் பட்டா மாறவில்லை என்றால் சரிதான். உயில் எதுவும் இல்லை என்ற காரணத்தால் தான் என் தாயாரின் பெயரில் பட்டா மாறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் இருந்து தான் என் பெயருக்கு பட்டா மாறியது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் என் தாயார் எழுதி கொடுத்த பிறகு பட்டா மாற்றம் செய்யவில்லை வட்டாட்சியர் ஆட்சேபணை தெரிவித்தார் அதன் பிறகு தான் பஞ்சாயத்தாரிடம் சென்றது. என்ன காரணத்தினால் பட்டா மாற்றக்கூடாது என்று சொன்னார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாரிசு முறைப்படி தான் பட்டா மாற்ற வேண்டும் என்று ஆட்சேபணை கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆட்சேபணை கொடுத்தது 1ம் வாதி. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் தகப்பானரால் எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் உயில் பத்திரமும், என் தாயாரால் எழுதி கொடுக்கபட்டதாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எந்த தேதி, மாதம், வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த ஆவணத்தை யார் பதிவு செய்தார்கள் என்று குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.2 வழக்கிற்காக என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணம் வாதிகளுக்கு

அனுப்படப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் வட்டாட்சியர் முத்திரை இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த ஆவணம் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.5 ஆவணத்தில் பட்டா மாறுதல் பத்திரம் வாதிக்களுக்கு தெரியாமல் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 படி சொத்துரிமை குறித்து வட்டாட்சியருக்கு இல்லை என்றும உங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யபட்டதாக மட்டுமே எனக்கு சொத்துரிமை ஏற்படுதத்தாது என்றும் வாதிகளின் பாக உரிமையை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.5ல் கண்ட பட்டா மாறுதல் உத்தரவில் கண்ட சொத்தில் தான் மீண்டும் பி.சா.ஆ.6ன் படி பட்டா மாறுதல் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் உத்தரவுகளும் போட்டது ஒரே அதிகாரிதான். சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக பி.சா.ஆ.5,6 ஆவணங்கள் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.7 ஆவணமானது என்னால் கொடுக்கப்பட்டது. பி.சா.ஆ.7 ஆவணம் எதற்காக கொடுத்தேன் என்றால் பட்டா மாறுதல் என் பெயரில் கொடுக்கமுடியாது என்று சொன்னார்கள் அதனால் கொடுத்தேன். தனிபட்ட முறையில் பட்டா மாற்றுவது தொடர்பாக அரசு அதிகாரிகளை வழிநடத்துவற்காக பி.சா.ஆ.7 ஆவணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.8, 9 வாதிக்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.10 ஆவணம் வழக்கிற்கு பிறகு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.11, 12 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாயார் எழுதி கொடுத்ததாக சொல்லபப்படும் செட்டில்மெண்ட் பத்திரத்தின் உரிமை உள்ளதாக சொல்கிறேனா அல்லது நீண்டகால அனுபவததின் அடிப்படையில் உரிமை உள்ளதாக சொல்கிறேனா என்றால இரண்டு வகையிலும் உள்ளது. இவ்வாறு சட்டப்படி கேட்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என்பது வாதிகள் மற்றும் எனது 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் கூட்டு அனுபவ சொத்து என்று சொன்னால் சரிதான். நான் 3ம்பிரதிவாதிக்கு ஒரு சொத்தை விற்றுள்ளேனா என்றால் விற்றுள்ளேன். பிரிவினை ஆகாத சொத்தை விற்பனை செய்வதற்கு சடடப்படி எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள கட்சிகள் அனைத்தும் தவறு என்றும், வாதிகள் கேட்டபடி அனைத்து பரிகாரங்களும் அவர்களுக்கு கிடைக்ககூடியது என்று சொன்னால் தவறு.